**இலங்கை போக்குவரத்து சபை - 2019**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

இலங்கை போக்குவரத்து சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகழ்விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இவ்வறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிட்டிருந்த விடயங்களின் படி சபையின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் ஒன்று தெரிவிக்கவில்லை.

**1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ் அறிக்கையில் 1.5 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஒன்றாகக் காணப்படுவதுடன், முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பரிசோதனை செய்யும் பொறுப்பு அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்ல வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபை தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதாக என்பது தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டுக்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக

அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன், அவ்வெளிப்படுத்துதல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அதன் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஜூன் 02 திகதிய பீஈடீ 12 இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 6.5.1 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்காக நிதிக் | இ.போ.ச. வின் இறுதிக் கணக்குகள் தயாரித்தல் பல வருட கால தாமதமாக இருந்ததுடன் தற்போது அந்த நிலைமையை தவிர்த்துக் கொண்டு 2020 ஆண்டு வரையும் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் படி குறிப்பிட்ட தினத்தில் இறுதிக் கணக்குகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| கூற்றுக்கள் 322 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2021 பெப்ரவரி 23 திகதியன்றே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | எவ்வாறாயினும் 2018 ஆண்டின் போது நிதிப் பிரிவின் அலுவல்கள் புதிய கணக்கீட்டு பெக்கேஜ் ஒன்று அறிமுகப்படுத்தியமையால் 2018 மற்றும் 2019 ஆண்டுகளுக்கான இறுதிக் கணக்கு அலுவல்கள் சற்று தாமதமாகியது. அதற்கான காரணம் அதன் ஆரம்ப அலுவல்கள் மற்றும் ஊழியர் பயிற்சி வழங்கல் ஆகியன மேற்கொள்வதோடு அதன் குறைபாடுகளை சரி செய்வதுடன் கணக்கீட்டு அலுவல்களும் மேற்கொள்ளப்பட்டமையால் ஆகும். | |

**1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 628,678,099 தொகையாக இருந்ததுடன், நிலையான மேலதிக பற்று வசதி ஒன்றும் மக்கள் வங்கியில் இருந்து பெற்றுக்கொண்டிருந்தது. இதற்காக ரூபா 325,100,000 இற்கான நிலையான வைப்புக்கள் பிணை பொறுப்புக்களாக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் இலங்கை நிதி அறிக்கைகள் நியம இலக்கம் 07 (SLFRS 7) 14 ஏ மற்றும் பீ பிரிவுகளின் பிரகாரம் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | இ.போ.ச. இற்கு சொந்தமான நிலையான வைப்பினை பிணையாக வைத்து நிலையான மேலதிகப் பற்று வசதிகள் பெறப்பட்டுள்ளது. (SLFRS 7) 14 ஏ இன் படி பொறுப்புக்கள் மற்றும் நிகழக்கூடிய பொறுப்புக்கள் மாத்திரம் வெளிப்படுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இது பொறுப்பு அல்லது நிகழக்கூடிய பொறுப்பு அல்லாததனால் வெளிப்படுத்தல் தேவைப்படாது. | இலங்கை நிதி அறிக்கைகள் நியம இலக்க 07 ன் (SLFRS 7) 14 ஏ மற்றும் பீ பிரிவுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | நியம இலக்கம் 16 இன் படி சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், நியமத்தின் 58 ஆம் பந்தியின் பிரகாரம், காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி வெவ்வேறாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செய்திருக்கவில்லை. | இ.போ.ச. கணக்கீட்டு கொள்கையுள் சொத்துக்கள் கிரய அடிப்படையில் பேணப்பட்டு வருகின்றது என, கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் படி கிரய முறை அல்லது மீள் மதிப்பீட்டு முறையின் கீழ் சொத்துக்களின் பெறுமதிகள் பேணப்பட்டு வர முடியும். அதன் படி இந்த அனைத்து சொத்துக்களையும் மீள்மதிப்பீடு செய்தல் அவசியம் இல்லை. | கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் படி செயற்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு வேலைத் திட்டத்தின் கீழ் 2019/2020 ஆண்டுகளின் போது ரூபா 426,390,078 தொகை பெறுமதியான இயந்திர உபகரணங்கள் சபைக்கு கிடைத்திருந்தது. இந்த இயந்திர உபகரணங்களில் ரூபா 189,343,036 தொகை பெறுமதியான 90 விடயங்கள் 2019 ஆண்டின் போது கிடைத்தவையாக இருந்ததுடன். அந்த இயந்திரங்கள் மீளாய்வாண்டின் போது இயந்திர உபகரணக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு மூலதன உதவிக் கணக்கிற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இந்த சொத்துக்களை சுங்கத்தில் இருந்து விடுவித்துக் கொள்வதற்காக சுங்கக் கட்டணமாக ரூபா 38,663,394 இற்கான தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. இந்த பெறுமதியை மூலதனப்படுத்தி இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இற்கு முரணாக ரூபா 322,194 தொகை பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருந்தது. அதன்படி பெறுமானத் தேய்வு அதே தொகையினால் கணக்குகளில் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | ஏதேனும் சொத்து ஒன்றினை மூலதனப்படுத்த வேண்டியிருப்பின் அதற்கு தேவையான பெறுமதியினை இனங்காண்பதற்காக தேவையான ஆவணங்கள் பெற்றிருக்க வேண்டும். இந்த இயந்திர உபகரணங்களை மூலதனப்படுத்துவதற்காக போதியளவு ஆவணங்கள் உரிய பிரிவில் இருந்து 2019 ஆண்டின் போது வழங்கியிருக்கவில்லை. அதன் காரணமாக அந்த இயந்திர உபகரணங்களை மீளாய்வாண்டின் போது மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | சொத்துக்களை சரியாக மூலதனப்படுத்த வேண்டும். |
| (ஆ) | எரி பொருள் நிரப்பு நிலையங்கள் மற்றும் சாரதிகள் பயிற்சிப் பாடசாலை வியாபாரக் கடன் கொடுத்தோர் கணக்கில் ரூபா 26,376,043 இற்கான வரவு மீதி ஒன்று காணப்பட்டது. அதன்படி அத்தொகையினால் கடன் கொடுத்தோர் மீதி நிதிக் கூற்றுக்களில் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | இங்கு காட்டப்பட்டுள்ள ரூபா 22,776,043 இற்கான மீதி எரிபொருள் நிரப்பு நிலையம் தொடர்பானதாகும். இது ஒரு வார தேவைக்காக எதிர் பொருள் பெற்றுக்கொள்வதற்காக வழங்கப்படும் காசோலையின் பெறுமதியாகும். இங்கு சாரதிப் பயிற்சிப் பாடசாலைக்குரிய பெறுமதி ரூபா 3,600,000 தொகையாகும். | சரியான மீதியை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | முற்பணங்களின் கீழ் ரூபா 1,828,207 இற்கான செலவு மீதியொன்று காட்டப்பட்டிருந்தமையால் முற்பணக் கணக்கு அந்தத் தொகையினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | இந்தத் தவறு ஏற்பட்டிருந்தது. அதன் பெறுமதி ரூபா 1,691,932 தொகை என சரி செய்யப்பட வேண்டியதுடன், இது கழுத்துறை பிராந்தியத்தியத்தில் உள்ள டிப்போக்களில் பானந்துர ரூபா 351,207 தொகையும், அழுத்கம ரூபா 414,795 தொகையும், மத்துகம 427,469 தொகையும், ஹொரண ரூபா 498,460 தொகையுமாக இருந்தது. அந்த டிப்போக்களினால் உத்தியோகத்தர்களுக்கு முற்பணம் வழங்குவதற்கு முன்னர் கொடுக்கப்படும் முற்பணத் தொகை ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து அறவீடு செய்யப்பட்டிருந்தது. | சம்பள முற்பணம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | ரூபா 15,771,334 பெறுமதிக்கான தடுத்து வைத்தல் பணம் நடைபெறு வேலைக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டமையால் நடைபெறு வேலைக் கணக்கு அத்தொகையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | கணக்குப் பதிவின் போது இந்த வழு ஏற்பட்டிருந்தது. | கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | சபையினால் மீளாய்வாண்டின் போது லீஸிங் முறையில் 325 பஸ் வண்டிகள் பெற்றிருந்ததுடன், அதற்காக செலுத்தியிருந்த ரூபா 263,435,339 இற்கான ஆரம்ப கொடுப்பனவு (Down Payment) முற்கொடுப்பனவின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | இந்த ஆரம்ப கொடுப்பனவு இறுதித் தவணைக்காக பதிலீடு செய்தல் வழமையான நடைமுறை ஆகும். அதன்படி இந்தத் தொகை கடன் தவணைகளில் இருந்து குறைக்கப்படின் செலுத்த வேண்டிய தவணைகளின் எண்ணிக்கை குறைவாக காட்டப்படும் அதனால் இதனை முற்பணக் கணக்கில் காட்டப்பட்டது. | ஆரம்ப கொடுப்பனவு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | ரூபா 4,089,000 தொகைக்கான கணக்காய்வுக் கட்டணச் செலவு செயற்பாட்டுச் செலவு வகைப்படுத்தல் கணக்கின் கீழ் காணப்படும் ஏனைய செலவுகள் கணக்கில் உட்படுத்தி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட வழு ஏற்பட்டிருந்தது. | செலவு வகைப்படுத்தல் சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | நிதி நிலைமைக் கூற்றில் 6 நடைமுறைக் கணக்குகள் தொடர்பாக காசேட்டு மீதி குறைவாக மற்றும் மிகையாக காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 32,663,359 இற்கான மீதியொன்று குறைவாக காட்டப்பட்டிருந்தது. | இ.போ.ச. இனால் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவது கணக்கீட்டு முறைமை ஒன்றின் மூலமே. அங்கு ஏதேனும் கொடுக்கல் வாங்கல்கள் ஏற்படும் சந்தர்ப்பத்திலேயே இந்தக் கணக்கீட்டு முறைமைக்கு உட்படுத்தப்படுகின்றது. எனினும் காசேடு தயாரிக்கும் போது அந்தக் கொடுக்கல் வாங்கல்கள் ஏற்படும் சந்தர்ப்பத்திலேயே குறிப்பிட்ட தரவுகள் அதற்கு உட்படுத்தப்படாமையால் (வருமானங்கள் தேறிய பின்னர் உபட்படுத்தப்படுகின்றமையால்) நிதிக்கூற்றின் மீதி மற்றும் காசேட்டு மீதிகளில் வித்தியாசம் ஒன்று ஏற்படுகின்றது. | காசேடு சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஏ) | வங்கிக் கணக்கொன்று தொடர்பாக 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக் கூற்றின் படி ரூபா 22,385,852 இற்கான அனுகூலமான மீதியொன்றினை காட்டிய போதிலும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாமையால் காசு மீதி அந்த எண்ணிக்கையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | 014-1001-6-0003586 இலக்கங் கொண்ட நடைமுறைக் கணக்கு இரத்மலான எரிபொருள் நிரப்பு நிலையத்திற்குரிய கணக்கு ஒன்றாகும். கணக்கீட்டு பெக்கேஜில் அது எரிபொருள் நிரப்பு நிலையம் என்ற பேரில் தனி அலகு ஒன்றாக காணப்படுகின்றது. இந்த வங்கி மீதி அந்த அலகினுள் குறிப்பிடப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் வங்கிக் கணக்கு மீதி சரியாக சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஐ) | சபைக்குச் சொந்தமான வேரஹெரவில் அமைந்துள்ள காணி ஒன்று கொத்தலாவல பாதுகாப்பு பீடத்துக்கு உரித்தாக்கியது தொடர்பாக திறைசேரியில் இருந்து 2018 ஆம் ஆண்டில் கிடைத்திருந்த ரூபா 2,000,000,000 மற்றும் மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 2,054,000,000 தொகையும் ஆக ரூபா 4,054,000,000 தொகையினை சரியாக கணக்கீடு செய்யாமல் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த தொகையினை காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு தொழிற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | இந்தத் தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுத் தொழிற்பாட்டின் கீழ் உட்படுத்தப்படவில்லை. | காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

**1.5.4 தொங்கல் கணக்குகள்**

| விடயம் | தொகை<br>ரூபா | தொங்கல் கணக்கில் காணப்பட்ட காலம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 967,187 இற்கான தொங்கல் கணக்கின் செலவு மீதி கணக்காண்டு இறுதியில் உள்ளவாறு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 967,187 | 01 வருடம் | இந்த மீதிகள் முன்னர் இருந்து காணப்படும் மீதகளாக இருந்ததுடன் அவை மஹரகம ரூபா 23,312.08 தொகை மற்றும் அவிஸ்ஸாவெல ரூபா 23,312 இற்கான செலவு மீதிகளும் மாவனெல்ல டிப்போவின் ரூபா 72,984,142 இற்கான வரவு மீதி ஒன்றும் ஆகும். மட்டக்களப்பு டிப்போவினால் வருமான தொங்கல் கணக்கு தொடர்பான மீதி ஒன்றான ரூபா 545,308 தொகை பெறுமதி தவறுதலாக தொங்கல் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அதே போல் மொனராகல டிப்போவினால் ரூபா 60,000 இற்கான பெறுமதி ஒன்று தொங்கல் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது கணக்கீட்டு வழு ஒன்றின் காரணமாகவே. | தொங்கல் கணக்கு மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.5 நிறுவனம் தொடர்ந்தியங்குதல்**

| கணக்கீட்டு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் நிதிக்கூற்றுக்களில் திறைசேரி மானியங்களை சீராக்கல் மேற்கொள்ள முன்னர் தொடர்ச்சியான நட்ட நிலைமை ஒன்று காணப்படுவதுடன் தொடர்ந்தும் அரசாங்க மானியம் கிடைக்காவிடின் சபையின் தொடர்ந்தியங்குதல் | கருத்துத் தெரிவிக்கவில்லை. | தொடர்ந்து இயங்குதல் தொடர்பாக உரிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

தொடர்பாக கேள்விக்குறி நிலைமை ஒன்று காணப்படுகின்றது.

**1.5.6 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்படும் தொழிற்படாத கணக்குகளின் வரவு மீதி | 1,290,782,781 | உரிய கணக்காய்வு சான்றுகள் ஏதும் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட வழு ஏற்பட்டிருந்தது. | கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்படும் தொழிற்படாத கணக்குகளின் செலவு மீதி | 18,526,264,783 | உரிய கணக்காய்வு சான்றுகள் ஏதும் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட வழு ஏற்பட்டிருந்தது. | கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய தொகை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நடத்துனர்களிடம் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 1,082,800 தொகையாக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 825,008 தொகை 10 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் அறவிடப்படாம் காணப்பட்டது. | இந்த ரூபா 825,008 தொகை பெறுமதி முன்னர் இருந்து முன்கொண்டு வரப்படும் பெறுமதியாகும். இந்த மீதிகளில் அறவிடப்படக் கூடிய மீதிகளை அறவீடு செய்வதற்கும் மீதியான தொகைகள் தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 10 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 673,709,857 இற்கான கடன்கொடுத்தோர் மீதிகள் முறையான ஆய்வின் பின்னர் பதிவழிப்பதற்கு அல்லது தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த ரூபா 673,709,857 இற்கான பெறுமதி முன்னர் இருந்து முன்கொண்டுவரும் பெறுமதியாகும். இந்த மீதிகள் உண்மையாகவே கொடுப்பனவு செய்யப்பட வேண்டியவையா அல்லவா எனக் கண்டறிந்து கொடுப்பனவு செய்யப்பட வேண்டியிருந்தால் அது தொடர்பாகவும், கொடுப்பனவு செய்யத் தேவைப்படாவிடின் அதாவது கணக்கீட்டு வழு ஒன்றெனின் அது தொடர்பாக அறிக்கை ஒன்று வழங்கும் படி அனைத்து பிராந்தியங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் படி எதிர்காலத்தில் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டு இந்தப் பெறுமதியினை சரிசெய்யப்படும். | கடன்கொடுத்தோர் மீதிகள் உரிய முறையில் சரிசெய்யப்பட வேண்டும். |
| (ஆ) ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் ஆகியவற்றிற்கு குறிப்பிட்ட தினத்தில் செலுத்தப்படாமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 9,099,049 இற்கான செலுத்த வேண்டிய மீதியொன்று காணப்பட்டது. | இ.போ.ச. சேமலாப நிதியத்திற்காக உரிமை கோரலை இது வரை இனங்கண்டிருக்காத அங்கத்தவர்களின் பங்களிப்புத் தொகையில் கோரப்படாத நலன் தொகை மாத்திரம் கொடுப்பனவு செய்ய வேண்டியுள்ளது. அந்த அங்கத்தவர்களினால் உரிய நலன்தொகைகளை கோரக்கூடிய முறைகளின் படி அவர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டு வருகின்றது. அதே போல் நிலுவையாக காணப்படும் அனைத்து சேமலாப நிதியம் மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதியம் இங்கு காணப்படும் பெறுமதி கணக்கீட்டு வழு ஒன்றின் காரணமான ஏற்பட்டிருந்தது. | பங்களிப்புத் தொகை உரிய தினத்தில் செலுத்தப்பட வேண்டும். |

**1.6.3 முற்பணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உத்தியோகத்தர்களுக்கு வழங்கி இருந்த சம்பள முற்பணங்கள் அடுத்தமாத சம்பளத்தில் அறவீடு செய்வதற்கு ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவீடு செய்யப்பட வேண்டியிருந்த மொத்தத் தொகை ரூபா 283,905,777 தொகையாக இருந்தது. அந்த மீதியில் ரூபா 4,751,012 இற்கான பெறுமதி 10 வருடங்களை விட மிகையான காலம் முதல் அறவிடப்படாமல் காணப்பட்டது. | 10 வருடங்களை மிகைத்துள்ள மீதிகள் முன்னர் இருந்து முன்கொண்டு வரப்படும் பெறுமதிகள் அடங்கியுள்ளது. அந்தப் பெறுமதியினை சரியாக இனங்கண்ட பின்னர் உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்யக்கூடிய மீதிகளை அறவீடு செய்வதற்கும், அவ்வாறு அறவீடு செய்ய முடியாத மீதிகள் காணப்படின் அது தொடர்பாக அறிக்கை ஒன்று பெற்றுக்கொண்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சம்பள முற்பணங்கள் உரிய முறையில் அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய தேவைகளுக்காக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் முற்பணங்கள் அவர்களினால் 30 நாட்களுக்குள் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 1,511,740,472 பெறுமதியான முற்பணங்கள் 01 வருடம் முதல் 10 வருடங்கள் வரையான காலப்பகுதியுள் அறவீடு செய்திருக்கவில்லை. | 1.6.3(அ) மற்றும் (இ) மூலம் இதற்கான பதில் வழங்கப்பட்டுள்ளது. | முற்பணங்கள் குறிப்பிட்ட தினத்தில் தீர்க்கப்பட வேண்டும். |
| (இ) | கூட்டுப்பெறுமதி ரூபா 1,509,222,479 தொகைக்கான உள்நாட்டு கொள்வனவு முற்பணங்கள், ஏனைய முற்பணங்கள் இ.போ.ச. முற்பணங்களில் விஷேட முற்பணங்கள் 05 வருடங்களை விட மிகையான காலம் முதல் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விஷேட முற்பணங்கள் மற்றும் ஏனைய முற்பணங்களின் கீழ் காட்டப்பட்டுள்ள பெறுமதிகள் இ.போ.ச. உத்தியோகத்தர்களின் சம்பளத்தில் இருந்து கழித்துக்கொள்ளும் அடிப்படையின் மீது வழங்கப்பட்ட முற்பணங்கள் ஆகும். அந்த முற்பண மீதிகள் முன்னர் இருந்து காணப்படும் மீதிகளாக இருந்தமையால் அறுதியாக இனங்கண்ட பின்னர் அவற்றை உரிய உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறு அறவீடு செய்ய முடியாத மீதி ஒன்று காணப்படின் அது தொடர்பாக | முற்பணங்கள் குறிப்பிட்ட தினத்தில் தீர்க்கப்பட வேண்டும். |

அறிக்கை ஒன்று பெற்றுக்கொண்டு தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 செப்தெம்பர் 18 ஆந் திகதிய பீஈடீ 2018/01 சுற்றறிக்கை | சபையினால் வாகனங்கள் குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்த போதிலும் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது 20 வாகனங்கள் சபையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு சொந்தமான வாகனங்களாக இருந்ததுடன், அந்த வாகனங்கள் உரிய கம்பனியின் ஊடாக சபைக்கு வழங்கி குறிப்பிட்ட உத்தியோகத்தர்களினால் பயன்படுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது எனவும். அதன் மூலம் சபையின் நிதி முறைகேடாக பயன்படுத்தப்படுதல் மேற்கொள்ளப்படுகின்றது என மேலும் அவதானிக்கப்பட்டது. | 2018 ஆண்டளவில் இ.போ.ச. விற்கு வாகனங்கள் குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் 2021.12.31 இன் பின்னர் வாகனம் ஏதும் குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தற்போது குத்தகை அடிப்படையில் பெற்றிருந்த வாகனங்களையும் அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | குறிப்பிட்ட சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை போக்குவரத்து சபையின் 1979 இன் 05 ஆம் இலக்க சுற்றறிக்கை | ஒரு ஆண்டின் போது சம்பளமற்ற விடுமுறை 01-07 வரை 07-14 வரை மற்றும் 15-27 வரை பெற்றுக்கொள்ளும் ஊழியர்கள் ரூபா 1,000 ரூபா 2,000 மற்றும் ரூபா 3,000 தண்டம் ஒன்றிற்கு உட்படுத்தப்படுவதுடன் அது தவிர ஒழுக்காற்று நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படாமையால் ஊழியர்கள் தொடர்ச்சியாக சம்பளமற்ற விடுமுறை பெற்றுக் கொள்கின்றார்கள் என அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக தாபனக் கோவையின் படியும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இ.போ.ச. ஒழுக்காற்று யாப்புத் தொடரின் படி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இங்கு காணப்படும் குறைபாடுகள் தொடர்பாக எனது கவனம் செலுத்தப்பட்டது. | ஒழுக்காற்று யாப்புத் தொடரின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

(இ) இலங்கை நிதிப் பிரமாணக் கோவை

-------------------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) பிரிவு 105 | பணிப்பாளர் சபையினால் 2010 ஜுன் 25 திகதி எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி நட்டங்கள் தொடர்பாக குறிப்பிட்ட தரப்பினர்களிடம் அறவிடப்படக் கூடிய உச்சமட்ட அளவு ரூபா 20,000 இற்கு வரையறுக்கப்பட்டிந்தமையால் சபைக்கு அறவிடப்பட வேண்டிய பாரிய தொகை ஒன்றினை அறவீடு செய்வதற்கு முடியாத நிலைமை ஒன்று ஏற்பட்டிருந்தது. | இந்தத் தீர்மானம் இ.போ.ச பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானம் ஒன்றாக காணப்படுவதுடன் தற்போது இந்தத் தொகை ரூபா ஒரு இலட்சம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. | இலங்கை நிதிப் பிரமாண கோவையின் 105 ஆம் பிரிவின் படி செயற்பட வேண்டும். |
| (ii) நிதிப் பிரமாணம் 110 | சபையினால் சேதங்கள் தொடர்பாக பதிவதற்காக பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. | சபையினால் சேதம் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. அவ்வாறாயினும் தற்போது அனைத்து சேவை நிலையங்களிலும் சேதங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 110 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) நிதிப் பிரமாணம் 381 | கடமை வங்கிக் கணக்குகள் ஆரம்பிப்பதற்காக திறைசேரிக்கு விண்ணப்பிக்க வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவில் சபையினால் 18 வங்கி நடைமுறை கணக்குகள் செயற்படுத்தப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியளவில் இ.போ.ச. தலைமை அலுவலகத்தில் 13 நடைமுறைக் கணக்குகள் பேணப்பட்டிருந்தது. அந் நடைமுறைக் கணக்குகள் நீண்டகாலத்திற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அக் காலத்தில் குறிப்பிட்ட கணக்கு திறப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டதா என உறுதிப்படுத்த முடியாமல் இருந்தமையால் இந்த கணக்குகளில் தேவையான கணக்குகளை மாத்திரம் பேணுவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 381 இன் படி செயற்பட வேண்டும். |
| (iv) நிதிப் பிரமாணம் 387 | காசோலைகள் மூலம் மேற்கொள்ளப்படும் அனைத்து கொடுப்பனவுகளுக்கும் தமது | அனேகமாக இந்தப் பெறுமதியினால் காட்டப்படுவது காசேட்டின் | நிதிப் பிரமாணங்கள் 387 இன் படி செயற்பட வேண்டும். |

| | |
|---|---|
| வங்கி மீதி போதியளவாக உள்ளதான என கொடுப்பனவு செய்யும் உத்தியோகத்தர் கவனம் செலுத்த வேண்டியதுடன் எந்த அரசாங்க வங்கிக் கணக்கின் மூலமும் மேலதிகப்பற்று வசதிகள் பெற்றுக்கொள்ளல் தடை செய்யப்பட்டுள்ள போதிலும், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபையில் ரூபா 239,443,555 இற்கான வங்கி மேலதிகப் பற்று ஒன்று காணப்பட்டது. அதற்கான வட்டியாக ரூபா 963,717 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. | படி மேலதிகப் பற்றாகக் காணப்படுவதுடன் வங்கிக் கூற்றுக்களின் படி மேலதிகப் பற்று வசதிகள் பெற்றுள்ளது. சில டிப்போக்களினால் மாத்திரமே.<br><br>இனிமேல் காசேட்டின் படி மேலதிகப் பற்று நிலைமை ஏற்படாது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,889,833,960 இற்கான இலாபம் ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 1,285,969,923 தொகை ஆகும். அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 603,864,037 இற்கான வளர்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு நிருவாகச் செலவு ரூபா 1,242,405,147 தொகையினால் குறைவடைதல் முக்கிய காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவு விடயங்களில் போக்குப் பகுப்பாய்வு

- மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக இலங்கை போக்குவரத்து சபையின் வருமானத்துள் அடங்கியுள்ள விஷேட படையினர் வாடகை வருமானம், எரிபொருள் விற்பனை வருமானம் மற்றும் அகற்றப்பட்ட எரிபொருள் விற்பனை வருமானம் முறையே 54 சதவீதத்தினால், 60 சதவீதத்தினால் மற்றும் 64 சதவீதத்தினால் குறைந்திருந்தது.
- இலங்கை போக்குவரத்து சபையின் மேலதிக நேரக் கொடுப்பனவு – திட்டமிடப்படாத சாரதிகள் மற்றும் நடத்துனர், பஸ் பதிவு செய்தல் மற்றும் வருமான அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் தனியார் பாதுகாப்புச் செலவு முறையே 53 சதவீதத்தினால், 200 சதவீதத்தினால் மற்றும் 137 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

### 2.3 விகிதாசார பகுப்பாய்வு

2018 ஆம் ஆண்டின் நடைமுறை சொத்துக்கள் விகிதாசாரம் 1:1.66 தொகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப 2019 ஆம் ஆண்டின் நடைமுறைச் சொத்து விகிதாசாரம் 1:1.31 ஆக இருந்தது. 2018 ஆம் ஆண்டின் தேறிய இலாப விகிதாசாரம் 3.53 சதவீதமாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப மீளாய்வாண்டின் தேறிய இலாப விகிதாசாரம் 5.29 சதவீதமாக இருந்தது. அதன் படி முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது நடைமுறை சொத்துக்கள் விகிதாசாரத்தில் மற்றும் தேறிய இலாப விகிதாசாரத்தில் முன்னேற்றம் ஒன்று காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2014 ஆம் ஆண்டின் போது 2,200 பஸ் வண்டிகள் 05 வருட கடன் அடிப்படையில் கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கையின் பிரகாரம் 05 வருட காலப்பகுதியுள் இந்த பஸ் வண்டிகளுக்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2020 மார்ச் மாதம் வரை கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறு கடன் காலவரையறை மிகைத்தல் மற்றும் காலாண்டு அடிப்படையில் செலுத்தப்படும் தவணைகள் உரிய முறையில் செலுத்தப்படாமையால் ரூபா 419,237,588 இற்கான தாமத வட்டி செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது. அதேபோல் உடன்படிக்கையின் படி அமெரிக்க டொலர்களின் மூலம் 2,200 பஸ் வண்டிகளுக்காக 72,620,000 அமெரிக்க டொலர்கள் செலுத்த வேண்டியிருந்ததுடன், செலாவணி விகிதாசாரம் வீழ்ச்சியடைந்த காரணமாக ரூபா 1,788 மில்லியனிற்கான நட்டமொன்று சபைக்கு நேரிட்டிருந்தது. இதன் படி ரூபா 2,207 மில்லியனுக்கான நட்டம் ஒன்று இந்த உடன்படிக்கையின் மூலம் ஏற்பட்டிருந்ததுடன், அது ஒரு பஸ் வண்டிக்கான சராசரி நட்டம் சுமார் ரூபா 1 மில்லியன் பெறுமதியைக் கொண்டிருந்தது. | இந்த 2,200 பஸ் வண்டிகள் தொடர்பாக தவணைப் பணம் செலுத்துவற்காக டிப்போக்களினால் நாளாந்தம் தலைமை அலுவலகத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த காலப்பகுதியில் டிப்போக்களில் காணப்பட்ட நிதி நெருக்கடி காரணமாக குறிப்பிட்ட பணம் கிடைக்கப்பெறாமையால் குறிப்பிட்ட தினத்தில் குறிப்பிட்டுள்ளவாறு தவணைப் பணத்தை செலுத்த முடியாமல் போனது. இதன் காரணமாக தாமத வட்டி ஒன்று செலுத்துவதற்கு நேரிட்டது.<br><br>மேலும் இந்த உடன்படிக்கையில் அமெரிக்க டொலர்களின் மூலம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தமையால் ரூபா மதிப்பு குறைதல் மீது ரூபா 1,784 மில்லியன் தொகை செலாவணி நட்டம் செலுத்த வேண்டி நேரிட்டிருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையின் பிராந்திய அலுவலகங்கள், டிப்போக்கள், சாரதிப் பயிற்சிப் பாடசாலைகள் மற்றும் பிராந்திய வேலைத் தளங்கள் அமைந்துள்ள காணிகள் தொடர்பாக சபையினால் | • இ.போ.ச வினால் காணிகள் தொடர்பாக நாளதுவரை ஆக்கப்பட்ட காணிப் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், | ஆவணங்கள் உரிய முறையில் பேணப்பட வேண்டும். |

நாளதுவரை ஆக்கப்பட்ட கோவைகள் பேணப்படல் அல்லது காணிகள் தொடர்பான பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. மேலும், சபைக்குச் சொந்தமான அனைத்து காணிகளையும் இனங்காணல் மற்றும் உரிமையை தீர்த்துக் கொள்ளல் காணியின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்தல் கணக்காய்வுத் திகதி வரை மேற்கொண்டிருக்கவில்லை.

இ.போ.ச. வின் பொறுப்பில் காணப்படும் மற்றும் உரிமைகள் காணப்படும் காணிகள் தொடர்பாக தகவல்களை கோவைப்படுத்தி கோவைகள் முறைப்படுத்தப்பட்டுள்ளது.

- காணி அலுவல்கள் தொடர்பாக பிராந்தியங்களுக்கு உரிய 12 குழுக்கள் நிறுவப்பட்டுள்ளதுடன், அந்த குழுக்களினால் அனைத்து தரவுகளும் சேகரிக்கப்பட்டு பிராந்திய மட்டத்தில் கோவைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றது. தற்போது பிராந்திய மட்டத்தில் சுற்றறிக்கை ஒன்றின் மீது தயாரிக்கப்பட்டுள்ள 12 காணிக் குழுக்களினால் இ.போ.ச. வின் பொறுப்பில் உள்ள அனைத்துக் காணிகள் தொடர்பாக காணிகளை இனங்காணல், காணிகள் தொடர்பான உரிமையை தீர்த்துக் கொள்ளல், காணிகளுக்காக சாட்டுதல் காணி உறுதி தயாரித்துக் கொள்வதற்காக ஆரம்பச் செயற்பாடுகள் ஆரம்பித்தல், காணிகள் தொடர்பாக பதிவேடு ஒன்று பேணுவதற்காக செயற்பட்டு இ.போ.ச. காணிகள் தொடர்பான முறையான அமைப்பொன்று செயற்படுத்தப்பட்டுள்ளது.

- இ.போ.ச வின் ஏக்கல வேலைத்தளம் அமைந்துள்ள தற்போது வ/ப லக்திவ பொறியியல் கம்பனி செயற்படும் 23 ஏக்கர் 1ரூட் 16.5 பர்சஸ்கள் காணிகளை தனதாக்கல் சட்டத்தின் கீழ் இ.போ.ச வுக்கு உரித்தாக்கல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இந்த காணிக்காக கொடுப்பனவு விடுதலை பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.
- 1957 இன் 48 ஆம் இலக்க

மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் படி பஸ் கம்பனிகளை அரசமயமாக்கிய போது இ.போ.ச. விற்கு வர்த்தமானி அறிவித்தல் மூலம் சாட்டப்பட்டிருந்த காணிகள் மற்றும் ஆதனங்களின் உரிமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக கௌரவ போக்குவரத்து அமைச்சர் மற்றும் காணி அமைச்சரினால் சமர்ப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்ட ஒன்றித்த அமைச்சரவை விஞ்ஞாபன வரைபு உரிய இணைப்புக்களுடனான வாகனங்கள் ஒழுங்குறுத்தல், பஸ் போக்குவரத்துச் சேவை மற்றும் புகையிரத பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இ.போ.ச. வினால் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் கொள்வனவு செய்யும் அடிப்படையில் அனுபவிப்பதற்காக பெற்றுக் கொண்டுள்ள காணிகளுக்காக அந்த ஆணைக்குழுவினால் சாட்டுதல் காணி உறுதிகள் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் படி தற்போது இ.போ.ச. மத்துகம டிப்போ மற்றும் ஹக்மன டிப்போ அமைந்துள்ள காணிகளுக்காக சாட்டுதல் காணி உறுதிகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மதவச்சி பிராந்திய வேலைத் தளத்தின் கொள்திறன் மற்றும் முன்ஆய்வு அறிக்கையின் படி ஒரு மாதத்திற்கு சுமார் 60 என்ஜின்கள் பழுதுபார்க்கக் கூடியதாக இருந்த போதிலும், மீளாய்வாண்டளவில் ஒரு மாதத்திற்கு 15 என்ஜின்கள் மாத்திரம் திருத்தப்படுகின்றது என அவதானிக்கப்பட்டதுடன், அது மொத்த கொள்திறனின் 25 சதவீதமாகக் காணப்பட்டதுடன் குறைபயன்பாடு 75 சதவீதமாக இருந்தது. | ஊழியர் பற்றாக்குறையின் காரணமாக மற்றும் என்ஜின் திருத்த வேலைகள் பஸ் பொடி அடித்தல் கொள்திறன் குறைவடைதலுக்கான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. பொதுவாக பஸ் பொடி ஒன்று திருத்துவதற்காக சுமார் 20 நாட்கள் எடுக்கின்றது. | உச்சமட்ட கொள்திறனில் அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 23 டிப்போக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது 167 பஸ் வண்டிகளில் மாத்திரம் மைலோ மீற்றர்கள் செயற்படுபவையாக காணப்பட்டதுடன், 846 பஸ் வண்டிகளில் மைலோ மீற்றர் செயற்படாமல் காணப்பட்டது. | i. அனைத்து பஸ் வண்டிகளுக்கும் டிஜிடல் மைலோ மீற்றர்கள் பொருத்தப்பட்டுள்ளதுடன், அவை செயற்படாவிடின் திருத்தி பயன்படுத்த முடியாதுள்ளது. அக் காரணத்தினால் புதிய மைலோ மீற்றர்கள் பொருத்தப்பட வேண்டி நேரிடுகின்றது. அப்போது அதிக கிரயம் ஒன்றினை மேற்கொள்ள நேரிடுகின்றது. அக் கிரயத்தினை கவனத்தில் எடுத்து மைலோ மீற்றர்கள் பொருத்துதல் மேற்கொள்ளப்படவில்லை.<br>ii. அதன் மூலம் பஸ் வண்டிகளை சேவை செய்தல் எண்ணெய் மாற்றுதல் சரியான கிலோ மீற்றர் எண்ணிக்கையில் மேற்கொள்ள முடியாது என சுட்டிக் காட்டப்பட்டுள்ள போதிலும் மைலோ மீற்றர் இன்மை அதற்கான தாக்கத்தை ஏற்படுத்திய பிரதான காரணியாக இருக்கவில்லை. ஊழியர் வெற்றிடம் மற்றும் அந்த பஸ் வண்டிகளுக்கு இடப்பட வேண்டிய எண்ணெய்யின் மாதிரிக்கு மாதிரி வித்தியாசப்படும். | மைலோ மீற்றர்கள் செயற்படு நிலைக்கு மாற்றப்பட வேண்டும். |

## 3.4 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமாக 2020 ஆண்டின் இறுதியளவில் 1037 பஸ் வண்டிகள் ஓட்ட நிலையில் இருந்து விளகியிருந்தது. | 2015 ஆண்டில் காணப்பட்ட பஸ் வண்டித் தொகுதி 2020 அளவில் குறைவடைவதற்கு பின்வரும் விடயங்கள் தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது.<br>i. பஸ் வண்டித் தொகுதியில் பஸ் வண்டிகள் ஒவ்வொரு வருடமும் பெறுமானத்தேய்வுக்கு உள்ளாவதுடன் அதன் மூலம் பஸ் வண்டிகளின் தொகுதி குறைவடைவதற்கு காரணமாக இருந்தது.<br>ii. ஆக்கபூர்வமற்ற பஸ் வண்டிகளை பாவணைக்கு உதவாததாக மாற்றி வாகனத் தொகுதியில் இருந்து அகற்றப்படுவதனால் பஸ் வண்டிகளின் தொகுதி குறைவடைவதற்கு தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.<br>iii. குறிப்பிட்ட உதிரிப் பாகங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் இலங்கையில் இன்மையால் உதிரிப் பாகங்கள் உற்பத்தி செய்யும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து பெற்றுக் கொள்வதற்காக குறிப்பிட்ட காலம் எடுக்கின்றது. அதன் காரணமாக திருத்த வேலைகள் தாமதம் அடைவதனால் ஓட்டத்துக்காக வழங்கப்படும் பஸ் வண்டிகளின் எண்ணிக்கை படிப்படியாக குறைவடைவதற்கு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.<br>iv. உண்மையான உதிரிப் பாகங்களுக்கு பதிலாக முகவர் நிலையங்கள் மூலம் வழங்கப்படும் உதிரிப் பாகங்கள் பஸ் வண்டிகளுக்கு பொருத்தப்பட்டு ஓட்ட நிலைக்கு உட்படுத்தப்படுவதனால் குறிப்பிட்ட காலத்திற்கு முன்னர் என்ஜின்கள் செயலிழந்து ஓட்ட | ஓட்ட நிலையில் இருந்து அகற்றப்படும் பஸ் வண்டிகளை திருத்த வேலை மேற்கொண்டு ஓட்ட நிலைக்கு மாற்றுவதற்கு மற்றும் அவ்வாறு மேற்கொள்வதற்கு முடியாத பஸ் வண்டிகளை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

நிலையில் உள்ள பஸ் வண்டித் தொகுதி குறைவடைவதற்கும் காரணமாக உள்ளது.

v. 15 வருடங்களை மிகைத்துள்ள பஸ் வண்டிகளுக்காக உதிரிப் பாகங்கள் மற்றும் தொகுதிகள் மற்றும் உப தொகுதிகள் உற்பத்தி செய்யப்படும் நாடுகளிலும் காணப்படாமையால் அவற்றை பாவணைக்கு உதவாதவையாக மாற்றி செய்து வாகனத் தொகுதிகளில் இருந்து அகற்றுவதற்கு நேரிட்டிருந்த காரணத்தினால் ஓட்ட பஸ் வண்டிகள் குறைவடைவதற்கு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள பிரதான காரணமாக இருந்தது.

vi. பாரிய விபத்துக்களின் காரணமாக சில பஸ் வண்டிகள் வாகனத் தொகுதியில் இருந்து வருடாந்தம் அகற்றப்படுகின்றது. (அவை திருத்த வேலை மேற்கொள்ள முடியாத நிலையில் காணப்படுபவை ஆகும்)

(ஆ) பஸ் வண்டிகளுக்கு பொருத்தப்படும் முற்பொருத்தல் டயர் ஒன்று சுமார் 15,000 கிலோமீற்றர்கள் மாத்திரமும் மீள் நிரப்பப்பட்ட டயர் ஒன்று 11,000 கிலோ மீற்றர்கள் மாத்திரமும் ஓடக் கூடியதாக இருக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் மீள் நிரப்பப்பட்ட டயர்களை கழற்றி அப்புறப்படுத்தப்பட்ட 34 சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன், அவை ஓடியிருந்த சராசரி கிலோ மீற்றர் எண்ணிக்கை 7,402 தொகை மாத்திரமே. அதன் படி முற்பொருத்தல் மற்றும் மீள் நிரப்பல் டயர்களின் மூலம் ஓடப்பட வேண்டிய அங்கீரிக்கப்பட்ட தூரத்தின் எண்ணிக்கை அளவு ஓடுவதற்கு முடியாமல் இருந்தது.

முற்பொருத்தல் டயர்கள் மற்றும் மீள் நிரப்பு டயர்கள் 34 சந்தர்ப்பங்களில் கழற்றி அப்புறப்படுத்துவதற்கு பின்வரும் விடயங்கள் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

i. நன்கு மட்டப்படுத்திய பாதைகளில் பிரயாணம் செய்யும் போது குறிப்பிட்ட காலத்திற்கு முன்னர் முன் பொருத்திய மற்றும் மீள் நிரப்பிய டயர்கள் கழறுதல் மேற்கொள்ளப்படாததுடன் கரடு முரடாண பாதைகளில் ஓட்ட நடவடிக்கைகளின் போது இந்த சம்பவங்கள் வழமையாக நடக்கின்றன. அந்தப் பாதைகளில் பஸ் வண்டிகளின் ஓட்டத்தை நிறுத்த முடியாதுள்ளது. ஏனென்றால் அந்த கிராமிய பாதைகள் பொது மக்களின்

டயர்கள் குறிப்பிட்ட நியமங்களுடன் முற்பொருத்தல் மற்றும் மீள் நிரப்பல் அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

நலனோம்புக்காக அந்த பஸ் வண்டிகள் அப் பாதைகளில் ஓடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக இச் சிக்கல்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது என சுட்டிக் காட்ட முடியும்.

ii. சரிவுகள் மற்றும் வளைவுகள் உடைய பாதைகளில் ஓடும் போது இந்தச் சிக்கல்கள் ஏற்படுகின்றது என காட்டப்பட்டுள்ளது. அதே போல் அந்த பஸ் வண்டிகளை ஓட்ட நிலையில் இருந்து அகற்றப்பட்டால் பாதையில் வீதிப் பயணிகள் நுகர்வினை பெற்றுக் கொள்ளும் பொது மக்களுக்கு அதன் மூலம் பாரிய சிக்கல்களுக்கு முகங்கொடுக்க நேரிடலாம். இ.போ.ச நலனோம்பலை குறிக்கோளாகக் கொண்டு ஓட்ட அலுவல்களில் ஈடுபடுவதுடன் அநேகமாக இலாபத்தை குறிக்கோளாக கொண்டிருக்கவில்லை.

iii. இந்த முற்பொருத்த டயர்கள் மற்றும் மீள் நிரப்பல் டயர்கள் கொள்வனவு செய்யும் நிறுவனங்களில் இருந்து குறிப்பிட்ட காலத்திற்கு முன்னர் டயர்களை அகற்றுவதற்கு நேரிட்டால் அந்த நிறுவனங்களுக்கு அறிவித்த பின்னர் ஏற்பாடுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அந்த ஏற்பாடுகளை குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு அனுப்பப்படுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| (இ) | மேற்கொள்ளப்பட் தெரிவுக் கணக்காய்வின் போது கிழக்கு மாகாணத்தில் 2 டிப்போக்களினால் பல வருடங்களுக்கு முன்னர் கொள்வனவு செய்திருந்த ரூபா 3,854,529 இற்கான வழமையாக வழங்குவதற்கு தேவைப்படாத 424 பஸ் உதிரிப் பாகங்கள் பயன்படுத்த முடியாமல் களஞ்சியத்தில் காணப்பட்டது. | பல வருட காலத்திற்கு முன்னர் பண்டாரவெல வேலைத் தளத்தில் இருந்து மற்றும் வேரஹெர வேலைத் தளத்தில் இருந்து கிடைத்திருந்த லேலன்ட் இசுசு உதிரிப் பாகங்களாக காணப்பட்டதுடன் தற்போது அந்த பஸ் வண்டிகள் பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டிருந்தது. அதன் காரணமாக அந்த உதிரிப் | இ.போ.ச. வில் காணப்படும் பயன்படுத்த முடியாத உதிரிப் பாகங்களை வெளித் தரப்பினருக்கு விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பாகங்கள் தேவைப்படாமல் காணப்பட்டதென இனங்காணப்பட்டது. அதே போல் கல்முனை டிப்போவில் வழங்குவதற்கு தேவைப்படாத பஸ் வண்டி உதிரிப் பாகங்கள் டிப்போவில் காணப்பட்டதுடன் அவை பல வருட காலத்திற்கு முன்னர் பிரதான அலுவலகத்தில் இருந்து வழங்கியிருந்த இசுசு மற்றும் டாடா பஸ் வண்டிகளின் உதிரிப் பாகங்கள் எனவும், தற்போது அந்த பஸ் வண்டிகள் பாவனையில் இருந்து அகற்றப்பட்டுள்ளன. சில டாடா பஸ் வண்டிகள் ஏனைய டிப்போக்களினால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது எனவும், மேலும் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். | |
| (ஈ) | 26 ஏக்கர்களைக் கொண்ட மெதவச்சி பிராந்தி வேலைத்தளம் அமைந்துள்ள காணியின் 5 ஏக்கர் தரைப் பகுதி ஒன்று முறையான அங்கீகாரம் இன்றி மூன்றாம் தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும் இந்தக் காணியின் 20.7 ஏக்கர் காணி பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. அதே போல் 1.25 ஏக்கர் காணிப் பகுதி ஒன்றில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பிராந்திய வேலைத் தளம் எதுவித தேவைக்கும் பயன்படுத்தப்படாமல் உக்கக் கூடிய நிலையில் காணப்பட்டது. | தற்போது ஊழியர் பற்றாக்குறை காரணமாக இந்தப் பிராந்திய வேலைத் தள அலுவல்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இந்தக் காணியில் உரிமை பற்றிய அலுவல்கள் இ.போ.ச. ஊடாக அலுவல்கள் மேற்கொள்ளப்படுவதுடன் எதிர்காலத்தில் இக் காணி ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | காணியின் உரிமையை உரித்தாக்கி ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | குருநாகல் பிராந்திய வேலைத் தளத்தில் என்ஜின் திருத்த வேலைக்காக 2017 ஜுன் 03 ஆந் திகதி கூறுவிலைகள் அழைக்கப்பட்டு ரூபா 12,737,394 தொகை பெறுமதியான 9 கருவிகள் மற்றும் இயந்திர உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு பிராந்திய வேலைத் தளத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அந்த இயந்திர உபகரணங்களில் ரூபா 3,661,430 தொகை பெறுமதியான Cylinder block head surface grinding machine இயந்திரம் மாத்திரம் குறித்த வேலைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது என அவதானிக்கப்பட்டதுடன் ரூபா 9,075,963 தொகை பெறுமதியான ஏனைய இயந்திர உபகரணங்கள் தொடர்பான பரிசோதனையின் போது அவை பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | புதிய இயந்திர உபகரண செயற்களத்தில் சேவை செய்வதற்காக இயந்திர தொழிநுட்பவியலாளர் வெற்றிடங்கள் காணப்பட்டது. இது தொடர்பாக இ.போ.ச. தலைமை அலுவலகத்திற்கு அறிவித்ததுடன் அதன் படி நாளாந்த அடிப்படையில் இயந்திர தொழிநுட்பவியலாளர் ஒருவர் 2020.07.22 திகதி கடமைக்கு வந்திருந்ததுடன், 2020.08.06 ஆந் திகதி முதல் இன்று வரை சேவைக்கு வந்திருக்கவில்லை. அதன் காரணமாக இது தொடர்பாக அறிவித்த போதிலும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஊழியர்கள் வழங்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br><br>2020.12.03 ஆந் திகதி இ.போ.ச. வின் பி.பொ. தொழிநுட்ப அவர்களின் அங்கீகாரத்துடன் வழங்கல் பிரிவிற்கு கட்டளை பத்திரங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உற்பத்தி அலுவல்கள் இடைநிறுத்தப்படுவதை தடுப்பதற்காக மதவாச்சி மற்றும் உடபெத்தாவ வேலைத் தளங்களின் மூலம் 8 x 4 G18 அலுமினியம் தகடுகள் பெற்றுக் கொள்ளப்பட்டன. 2021.01.05 திகதி மீண்டும் கட்டளை பத்திரங்கள் இ.போ.ச. விற்கு ஒப்படைக்கப்பட்ட பின்னர் 2021.01.22 ஆம் திகதி மேற்கூறிய வகையான 75 அலுமினியம் தகடுகள் குருநாகல பிராந்திய வேலைத் தளத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.<br>2020 திசெம்பர் மாதம் விலை கட்டளை பத்திரங்கள் மற்றும் ER 49 பிரதிகள் இ.போ.ச தலைமை அலுவலத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கியிருந்ததுடன், குறிப்பிட்ட தினங்களில் குறிப்பிட்ட பண்டங்கள் டென்டர்கள் அனுமதிக்கப்பட்ட நிறுவனங்களில் போதியளவு காணப்படாமையால் தேவையான எண்ணிக்கை காணப்படாமையால் | சொத்துக்களை ஆக்கபூர்வமான பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

தேவையான எண்ணிக்கையான பண்டங்கள் பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. மீண்டும் 2021.03.08 ஆந் திகதியளவில் 10 யூரோ பிஸ்டன் சிலிவ் செட்கள் குருநாகல பிராந்திய வேலைத் தளத்திற்கு வழங்கப்பட்டது.
2020.11.25 திகதி 05 தரக் குறைவான முறுக்கு தண்டுகள் திரும்ப அந்த நிறுவனத்தினால் பெற்றுக் கொண்டு 05 தரமான முறுக்கு தண்டுகள் அத் திகதியிலேயே எமது நிறுவனத்திற்கு மீண்டும் ஒப்படைக்கப்பட்டிருந்தது.
2020.11.18 திகதியளவில் தேவையான தினர் கிடைக்காமல் இருந்ததுடன் கூறுவிலைகள் அழைப்பதன் மூலம் பி/பொ/தொழிநுட்ப அவர்களின் அங்கீகாரத்தை பெற்று 2021.03.03 திகதி 40 லீற்றர் தினர் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

இ.போ.ச. தலைமை அலுவலகத்தின் சிவில் பொறியியலாளர் பிரிவிற்கு இது தொடர்பாக கடிதங்கள் மற்றும் தொலைபேசி அழைப்புக்கள் மூலம் பல தடவைகள் அறிவுறுதித்திய போதிலும் இது வரை திருத்த வேலைகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. இதற்காக சிவில் மதிப்பீடும் தயாரிக்கப்பட்டுள்ளது.

தேவையான சிதைவடைந்த பண்டங்களை களஞ்சியத்தில் போடவேண்டி இருந்தமையால் களஞ்சியத்தில் வைக்கப்பட்டுள்ள (சிதைவடைந்த பிஸ்டன், சிதைவடைந்த ப்ராஸ்கோன் என்பன) தற்போது பிரதான களஞ்சியத்தில் காணப்படும் மர ஏத்தானங்கள் அனைத்தும் பயன்படுத்த முடியாத நிலைமைக்கு உக்கியிருந்தது. அதன்படி ஆக்கபூர்வத் தன்மை தொடர்பாக S5 (எஸ் ஐந்து) எண்ணக்கருவினை

| | | | |
|---|---|---|---|
| | | செயற்படுத்துவதற்காக தாமதம் ஏற்பட்டிருந்தது.<br><br>பிரதான படலைக்காக இரும்பு வழங்குதல் மற்றும் தயாரித்துக் கொடுத்தல் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் நிறைவேற்றிக் கொள்வதற்கான இயலுமை மற்றும் முயற்சி ஒன்று எடுக்கப்பட்டது. எனினும் அதற்கான சந்தர்ப்பம் ஒன்று கிடைத்திருக்கவில்லை. இ.போ.ச. தலைமை அலுவலகத்தின் சிவில் பொறியியல் பிரிவுக்கு இது தொடர்பாக கடிதங்கள் மற்றும் தொலைபேசி அழைப்புக்கள் மூலம் பல தடவைகள் அறிவுறுத்திய போதிலும் இது வரை திருத்த வேலை ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. இதற்காக சிவில் மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது. | |
| (ஊ) | வாகன வாயு வெளியேற்றல் நிலையங்கள் நிர்மாணித்தல் முன்சாத்தியக்கூறு ஆய்வொன்று மேற்கொள்ளப்படாமல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. குருநாகல் மற்றும் மதவாச்சி ஆகிய நிலையங்களின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு திறக்கப்பட்டுள்ளன. சட்டச் சிக்கல் ஒன்று காரணமாக மூடப்பட்டு காணப்படுகின்றது. அதனால் அந்த நிலையங்களின் ரூபா 18.75 மில்லியன் பெறுமதியான இயந்திர உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டதுடன், கணக்காய்வுத் திகதியாகிய 2019 செப்தெம்பர் 30 திகதி வரை சிவில் வேலைகளுக்காக சபை ரூபா 22.48 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. | வாயு வெளியேற்றல் நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்ட போதிலும் இந்த புகைச் சான்றிதழ்கள் வழங்கும் நிறுவனங்களின் மூலம் நீதிமன்றத்திற்கு விடயங்களை சமர்ப்பிப்பித்ததன் காரணமாக இந்த செயற்திட்டத்தை இடைநிறுத்த நேரிட்டது. | செயற்திட்டத்தை உரியவாறு செயற்படுத்தப்பட வேண்டும். |

### 3.5 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | களுத்துறை மற்றும் மதுகம டிப்போக்களில் கழிவறை முறைமைகள் நிர்மாணிப்பதற்காக | களுத்துறை மற்றும் மதுகம கழிவறை முறைமைகள் நிர்மாணிக்கும் அலுவல்கள் | ஒப்பந்த வேலைகள் உரிய வழிகாட்டல்களின் படி செயற்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 5,698,960 இற்கான தொகைக்கு நிர்மாண வேலை கம்பனி ஒன்றிற்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு சாட்டப்பட்டிருந்த நிர்மாண வேலைகளுக்காக சபை மீளாய்வாண்டின் போது ரூபா 1,245,533 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. 2021 பெப்ரவரி 05 கணக்காய்வுத் திகதியளவிலும் இந்த நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், நிர்மாண வேலைகளுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கும் போது மற்றும் அவற்றை அங்கீகரிக்கும் போது அவற்றிற்கான அங்கீகரிக்கப்பட்ட ரேட்கள் மற்றும் விவரக் குறிப்புக்கள் தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை. | பெறுகைத் தீர்மானம் மீது இந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் குறிப்பிட்ட நிறுவனம் இந்த அலுவல்களை இடைநிறுத்தியிருந்தது. தற்போது இது தொடர்பாக சட்டப் பிரிவினால் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கழிவறை முறைமையின் கொங்கிரீட் கூரைக்கான விவரக் குறிப்பு நிர்மாண வேலைக்காக தயாரிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டில் இலக்கம் 08 இல் குறிப்பிடப்பட்டிருந்தது. கழிவறை முறைமையின் நிர்மாணவேலை அலுவல்களின் போது கொங்கிரீட் கூரையின் கனத்தை அதிகரித்து அந்தக் கொங்கிரீட் கூரைக்கு மேல் சுவர்கள் எழுப்பப்பட்டு நீர்த் தொட்டி நிறுவப்பட்டு அதன் மூலம் டிப்போ வளவிற்கு தொடர்ச்சியாக நீர் வழங்கும் குறிக்கோளுடனே ஆகும். | |
| (ஆ) | சபையினால் 2018 மார்ச் 20 ஆந் திகதி ஒருகொடவத்த எரிபொருள் நிரப்பு நிலையம் நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 61,014,316 தொகை பெறுமதியான உடன்படிக்கையின் பிரகாரம் இவ் விடயம் 2018 ஜுன் 20 திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2020 ஆகஸ்ட் 19 திகதி அளவிலும் இந்த நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த நிர்மாண வேலைகள் தொடர்பாக பெறுகை அலுவல்கள் பெறுகை வழிகாட்டல் கோவைக்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் சபைக்கு ரூபா 2,102,126 இற்கான நிதிசார் நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தது. மேலும் ஒப்பந்தக்காரர் உடன்படிக்கையின் படி குறிப்பிட்ட தினத்தில் நிர்மாண வேலை பூர்த்தி செய்யாமையால் சபைக்கு எரிபொருள் நிரப்பு நிலையத்தை செயற்படுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த வருமானத்தை இழந்துள்ளது. அதே | இ.போ.ச. பாரிய அளவிலான பெறுகை சபையினால் 2018.02.26 திகதி நடைபெற்ற 04 ஆவது பெறுகை கூட்டத்தில் ஒருகொடவத்த எரிபொருள் நிரப்பு நிலையம் நிர்மாணிப்பதற்காக ரூபா 61,014,316 இற்கான தொகைக்கு ஒருகொடவத்த எரிபொருள் நிரப்பு நிலையத்தின் நிர்மாணவேலை ஒப்பந்தத்தை வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்காக 2018.02.14 திகதி போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவை செயலாளர் அவர்களினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. லாப் இன்ஜினியரின் கம்பனிக்கு பெறுகை அலுவல்கள் வழங்கும் போது அதற்கான சமோதா கன்ஸ்டக்ஷன் தனியார் கம்பனியை விட ரூபா 2,102,126 தொகை கூடிய பெறுமதிக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. லாப் இன்ஜினியரின் கம்பனி நிர்மாணவேலையை | பெறுகை வழிகாட்டல் கோவையின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போல் ரூபா 12,610,500 தொகை பெறுமதியான 07 டீசல் மற்றும் பெற்றோல் பம்புகள் அந்த வளவில் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஏதும் இன்றி காணப்பட்டதுடன் வைக்கப்பட்டிருந்த செய்யப்பட்டிருந்த எரிபொருள் தொட்டிகளின் மூடிகள் ஒப்பந்தக்காரரினால் எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. | முறைப்பிரகாரம் மேற்கொள்ளப்படாமை தொடர்பாக அடிக்கடி அறிவுறுத்தப்பட்டதுடன் இ.போ.ச. சட்டப் பிரிவுக்கு அறிவித்து அறிவுரைகள் பெற்று செயலாற்றுகை பிணைமுறி (ரூபா 3,105,100) 2020.06.11 திகதி இ.போ.ச. விற்கு செலவு வைக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டது. பின்னர் அதன் காரணமாக இந்த எண்ணெய் தொட்டிகளின் மூடிகளை எடுத்துச் சென்றமையால் அது தொடர்பாக கிரான்ட்பாஸ் பொலிஸ் நிலையத்தில் இ.போ.ச. வினால் முறைப்பாடு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. தற்போது இ.போ.ச. பாதுகாப்பு உத்தியோகத்தர்களினால் 24 மணித்தியாலங்கள் முற்றாக பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. | |
| (இ) | உடஹமுள்ள சாரதிப் பயிற்சி கல்லூரியில் விரிவுரை மண்டபம் ஒன்று நிர்மாணிப்பதற்காக 2018 ஆண்டின் போது ரூபா 2,749,740 இற்கான பெறுமதிக்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு ரூபா 824,922 இற்கான முற்பணத் தொகையும் மேலும் ரூபா 108,767 இற்கான தொகை ஒன்றும் செலுத்தப்பட்டிருந்த போதிலும் நிர்மாண வேலைகள் இடைநிறுத்தப்பட்டு விளைவற்றுக் காணப்பட்டது. | இந்த பில்பத்திரத்திற்கான கொடுப்பனவு செய்யும் போது செலுத்தியிருந்த முற்பணத் தொகையில் ஒரு பகுதியை கழித்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2019 ஜனவரி மாதம் இரண்டாவது பில் பத்திரம் என ரூபா 658,217.80 தொகையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த பில் பத்திரத்திற்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்படவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 சுற்றாடல் சிக்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| டிப்போ வளாகங்களில் காணப்படும் செயற்களங்களில் எண்ணெய் கழிவுப் பொருட்கள் இடுவதற்காக முறைப் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறை ஒன்று பயன்படுத்தப்பட வேண்டியிருந்ததுடன், 2008 ஜனவரி 25 திகதிய இலக்கம் 16/1533 இலக்கங் கொண்ட அதிவிஷேட | நிறுவனத்தில் செயற்படுத்தப்படும் ஆக்கபூர்வமான எண்ணக்கரு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 24 டிப்போக்களுக்காக அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொண்டிருந்ததுடன் மேலும் 11 டிப்போக்களுக்காக | வர்த்தமானி மற்றும் 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

வர்த்தமானியின் மூலம் மற்றும் 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டத்தின் படி அதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அனுமதிப் பத்திரம் ஒன்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், சபையின் 107 டிப்போக்களில் 11 டிப்போக்கள் தவிர ஏனைய டிப்போக்கள் அந்த சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொண்டிருக்கவில்லை.

தற்போது அனுமதிப் பத்திரத்திற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.